10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கலைமாணித்தேர்வு 2010/2011

(ஜனவரி/பெப்ரவரி 2013)

**PSS – 3103 Concept of Conflict and Political Violence**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி 1ல் மூன்று வினாக்களையும், பகுதி 11ல் ஒரு வினாவையும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடைதருக.

---

பகுதி -1

01.(அ) உள்நாட்டில் மோதல் நிகழ்வதற்கு மைக்கெல் பிறவுண் கூறும் மூல காரணங்களுக்கும் இலங்கையில் உள்நாட்டு மோதல் நிகழ்வதற்கான மூலகாரணங்களுக்கும் இடையில் தொடர்புள்ளதாக நீர் கருதுகின்றீரா? நியாயம் கூறுக.

(13 புள்ளிகள்)

(ஆ) ஜோகான் கல்டூன் மோதல் இயங்கியல் பண்பு பொண்டதாகும் எனக் கூறகின்றார். இக்கருத்தினை அவர் அறிமுகப்படுத்திய மோதல் முக்கோணியினை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

02.(அ) மோதல், வன்முறை ஆகிய இரண்டு பதங்களுக்கும் இடையிலான தொடர்பினைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஜோகான் கல்டூன் அறிமுகப்படுத்தும் வன்முறை வடிவங்களூடாக சமகால வன்முறைகளை விளங்கிக் கொள்ளமுடியுமா? பொருத்தமான உதாரணங்களுடன் உமது விடையினைத் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

03.(அ) “மோதலைத் தடுப்பதற்கு” கையாளக்கூடிய நுட்பங்கள் எவை?

(9 புள்ளிகள்)

(ஆ) “மோதலைத் தீர்த்தல்” என்பதன் பொருள் யாது?

(8 புள்ளிகள்)

(இ) மோதல் முகாமைத்துவம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கருத்தக்களைத் தெளிவுபடுத்துக. (8 புள்ளிகள்)

04.(அ) J வளைவு (J Curve) கோட்பாடு விளக்கும் புரட்சி பற்றிய கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒப்பீட்டுத் தேய்மானக்கோட்பாடு (Relative Deprivation) முன்வைக்கும் புரட்சிக்கான சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

## பகுதி – 11

05. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தில் கையாளப்படும் வழிவகைகள் இலங்கையில் நோர்வேயினால் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்த முயற்சி இலங்கையில் தோல்வியடைந்துள்ளது. பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள்)

06. சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கு சர்வதேசளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் இதுவரை உலக சமாதானம் அடையப்படவில்லை. சமாதானத்தினையடைவதற்காக சர்வதேசளவில் மேற்கொள்ளப்படும் நுட்பங்களையும், செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள்)